1986 மே 2]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நாம் மேற்கொண்டோம் என்றால், குறைந்த அளவு 100.5 ஏக்கரா வனப் பிரதேசத்திற்குச் சொந்தமான நிலத்தை இந்த அரசு கையகப்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவ்வாறு கையகப்படுத்தினால்தான் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும். அதைக் கையகப்படுத்த வேண்டுமென்றால் வனத் துறையின் அனுமதி வேண்டும். அந்த அனுமதி மத்திய அரசின் ஒப்புதலோடுதான் தர முடியும். தங்க வால் குரங்கு என்று சொன்னார்கள்; தங்க வால் குரங்கு அல்ல, சிங்கவால் குரங்கு—ஆதலால் அந்த அனுமதியை வழங்க மறுக்கிறது. அந்த அனுமதியை வழங்க வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ந்து வைக்கப்படுகிறது. ஆனால் அந்தக் கோரிக்கை இதுவரையில் ஏற்கப்படவில்லை. ஆகவே, மைய அரசு அனுமதியை வழங்கினால்தான் தொடர்ந்து அதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். இன்னும் ஆய்வே மேற்கொள்ளப்படவில்லை.

இரவிமங்கலம் கண்மாய்.

644—(*வினா 7825)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம் பழனித் தொகுதி இரவிமங்கலம் கிராமம், இரவிமங்கலம் கண்மாயை செப்பனிட பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த இரவிமங்கலம் கண்மாய் சம்பந்தமாக ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு, 44 இலட்சம் ரூபாய் சேங்க்ஷன் செய்யப்பட்டு, வேலை செய்யப்படவில்லை என்று அந்த இலாக்காவைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள்; அந்த மக்களும் சொல்கிறார்களே, ஆனால் அமைச்சரவர்கள் இது ஆய்வே செய்யப்படவில்லை என்று சொல்கிறார்கள். இதில் எது உண்மை என்பதை அறிய விரும்புகிறேன்.

[1986 மே 2

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பணியை ஆய்வு செய்யவில்லை என்று எங்கேயுமே நான் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தம்முடைய மூலக் கேள்வியில் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. அவர்கள், பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்றுதான் கேட்டிருந்தார்கள்; அதற்குத் தான் இல்லை என்று கூறினேன். காரணம், இந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று மாநில அரசு கருதியது. இந்தத் திட்டத்தை ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் மேற்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு வந்தது. ஆனால் இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கு முன்னால் ஆங்காங்கு இருந்து வர வேண்டிய நிதியே வரவில்லை. அந்த முறையிலே அந்தத் திட்டத்தை மேற்கொள்ள முடியவில்லை. வேறு ஏதாவது வழிவகையிலே அல்லது வேறு சிறுபாசன திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் அடிப்படையிலே, இந்தத் திட்டத்தை மேற்கொள்ள முடியுமா என்ற ஆய்வு இப்பொழுது நடந்து கொண்டு வருகிறது. ஆகவே, அந்த ஆய்வுக்குப் பிறகுதான் நாம் ஒதுக்கீடு செய்ய முடியும். நிதி ஒதுக்கீடு செய்தால்தான் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு ஆம் என்ற பதில் வரும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு என் நன்றி. அந்தக் கண்மாய் ஆயிரத்து சொச்சம் ஏக்கர்கள் பாயக் கூடிய கண்மாய். அது மேடிட்ட காரணத்தால் அங்கே தண்ணீர் தேங்காமல் விவசாய மக்கள் கஷ்டப்படுகிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சரிடத்திலே மிக்கப் பணிவோடு கூறிக் கொள்கிறேன். எனவே, மீண்டும் துரிதமாக நடவடிக்கை எடுத்து, நம்மிடத்திலே பணம் இல்லாவிட்டாலும் புல்டோசர் வைத்து அந்த மேட்டை எடுத்து பிறகு ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் மூலமாக அதைச் செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1986 மே 2]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரவிமங்கலம் கிராமத்திலுள்ள இரவிமங்கலம் கண்மாயைச் செப்பனிட, சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் கீழ், ஆய்வுகள் செய்யப்பட்டு, மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டன. எனினும், நான் முன்பே சொன்னது போல், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ், அந்தத் திட்டத்தை மேற்கொள்ள அரசு முனைந்தாலும், அந்தத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால், அந்தத் திட்டத்தை நாம் மேற்கொள்ள இயலவில்லை. அவ்வாறு மேற்கொள்ள இயலாவிட்டாலும் வேறு பல்வேறு திட்டங்களின் கீழ் அந்தத் திட்டத்தை நடைமுறை செய்ய இயலுமா என்ற சாத்தியக் கூறுகளை இந்த அரசு பரிசீலித்து வருகிறது. ஏதாவது, வாய்ப்பு ஏற்படுமானால், அந்தத் திட்டத்தை மேற்கொள்வதில் இந்த அரசு மகிழ்ச்சி அடையும்.

சித்தப்பட்டிணம் கால்வாய் திட்டம்.

645—(வினா எண். 5055)—திரு. மு. சந்திரசேகர்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம் முகையூர் தொகுதியில் உள்ள சித்தப்பட்டிணம் ஏரியில் நீரை தேக்கி—புதிய கால்வாய்களை அமைத்து சொரையப்பட்டு—நெடுகம்பட்டு மற்றும் 10 கிராம ஏரிகளுக்கு நீர் கொண்டு செல்லும் சித்தப்பட்டிணம் கால்வாய் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: இத்திட்டம் தல அதிகாரிகளின் விரிவான ஆய்வில் உள்ளது.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சித்தப்பட்டிணம் ஏரியானது, சாத்தனூர் அணையில் நீர் பிடிக்கும் ஏரியாக உள்ளது. ஆகவே, தென் பெண்ணையாற்றிலே, வீணாகப் பாய்கின்ற நீரைத் தேக்கி வைத்து, வறண்ட பகுதியாக இருக்கிற சொரையப்பட்டு—